12-06-2025.

Ele.O.P.No.36/2022

C.W. 5 மைதிலி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை (தொடர்ச்சி)

16.10.2023ம் தேதியிட்ட ந.க.எண்.6217/2023 ன்படி அனுப்பிவைக்கப்பட்ட விசாரணை அழைப்பாணை நகல் நீ.ம.சா.ஆ.24. இறந்துபோன வேலுச்சாமியும், உயிருடன் உள்ளதாகச்சொல்லும் வேலுச்சாமியும் சம்மந்தப்பட்ட ஆவணங்களை விசாரணை செய்வதற்கும், ஆளறிதழ் சான்று கிராம நிர்வாக அலுவலரால் கொடுக்கப்பட்டது தவறு என்று சுட்டிக்காட்டி கொடுக்கப்பட்ட மனுவிற்கு அனுப்பபட்ட அழைப்பாணைதான் நீ.மசாஆ.24 என்றால் சரிதான். ஆளறிதழ் சான்று தவறு என்று சொன்னதற்கு பிறகு இரண்டு வேலுச்சாமியின் ஆதார் அட்டைகளை சரிபார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். இறந்துபோன வேலுச்சாமி த/பெ சின்னத்தம்பி என்பவரது பிறந்ததேதி 14.4.1982 என ஆதார் அட்டையில் உள்ளது. உயிருடன் இருக்கும் வேலுச்சாமி த/பெ சின்னத்தம்பி என்பவரது பிறந்த தேதி 1.1.1982 என ஆதார் அட்டையில் உள்ளது. அந்த இரண்டு ஆதாஅட்டைகளின் நகல்கள் நீமசாஆ.25 வரிசை. மேற்படி இரண்டு பிறந்த தேதிகளை வைத்து பார்க்கும்போது காலஇடைவெளி 4 மாதத்திற்குள் உள்ளபோது இரண்டு குழந்தைகள் எப்படி பிறக்கும் என்பது குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் இதுகுறித்து விசாரணை செய்தார். கிராம நிர்வாக அலுவலர் விசாரணையில் சின்னத்தம்பி என்பவருக்கு 2 மகன்கள் என்றும் அவர்கள் இருவர் பெயரும் வேலுச்சாமி என்றும் தெரிவித்திருந்தார். கிராமநிர்வாக அலுவலர் மட்டுமின்றி ஆயக்குடி பஞ்சாயத்து அலுவலகத்தில் கொடுத்த சான்றின்படி இறப்புச்சான்றும், வாரிசு சான்றும் வேலுச்சாமிக்கு கொடுத்துள்ளார்கள். ஒரு வாரிசு சான்றிதழில் தவறு ஏற்பட்டால் அதனை வட்டாட்சியரே திருத்தலாம், ரத்து செய்யலாம் என்றால் சரிதான். இந்த மனு பிரச்சனைக்கு ஆதார் கார்டுகளை சரிசெய்த பிறகாவது வாரிசு சான்றை மாற்றம் செய்தோமா என்றால் அதில் பிறந்த தேதி வராது.

உயிருடன் இருக்கும் வேலுச்சாமியின் ஓட்டுநர் உரிமம் நீமதசாஆ.9 ல் பிறந்த தேதி 15.04.1982 என கண்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன வேலுச்சாமியின் இறப்புச்சான்றிதழ் நீ.மசாஆ.23 ல் பிறந்த தேதி 15.4.1982 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன வேலுச்சாமியின் ஆவணங்களைப் பயன்படுத்தி உயிருடன் இருந்த வேலுச்சாமி முன்மொழிந்துள்ளார் என்றும் ஆள்மாறாட்டம் செய்து வேறொருநபர் இறந்துபோன வேலுச்சாமியின் பெயரை தவறாக பயன்படுத்தி தேர்தல் ஆவணத்தில் (வேட்பாளர் விண்ணப்பம்) முன்மொழிந்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிர்மனுதாரருக்கு சாதகமாக நடந்துவருகிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் தற்போது இருக்கும் நபர் வேலுச்சாமி இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் வழங்கிய வாரிசு சான்றிதழ் மற்றும் ஆதார் அட்டை, குடும்ப அட்டை எல்லாமே தவறு என்றால் சரியல்ல. ஆளறிதழ் சான்று செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல.

**3 முதல் 10 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

வேட்புமனு பரிசீலனை செய்யும்போதே ஆட்சேபனை செய்திருக்கவேண்டும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :–

சட்டப்படி எனக்கு கொடுத்த அனைத்து மனுக்களையும் பரிசீலனை செய்து ஆட்சேபனை சம்மந்தமாக முறையாக நடவடிக்கை எடுத்து அறிக்கை தயார் செய்தேனா என்றால் இல்லை.

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.12 17:45:39 +0530

Principal District Judge,
Dindigul.